සියලු ම හිමිකම් ඇවිරිණිතත

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department Of Education – Western Province

**බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව**
**மேல்மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Department of Education – Western Province**

**දෙවන වාර ඇගයීම**
**இரண்டாம் தவணை பரீட்சை - 2018**
**Second Term Evaluation**

| ශ්‍රේණිය / தரம் / Grade | 06 | විෂයය / பாடம் / Subject | கணிதம் | පත්‍රය / வினாத்தாள் / Paper | I , II | කාලය / காலம் / Time | 02 மணி |
|---|---|---|---|---|---|---|---|

**பெயர் :-...................... ..................................** **சுட்டெண் :- ...................**

## பகுதி I

- **எல்லா வினாக்களிற்கும் விடைகளை இத்தாளிலேயே எழுதுக.**
  **ஒவ்வொரு வினாவிற்கும் 02 புள்ளிகள் வழங்கப்படும்**

1. சர்வதேச நியமத் திகதியில் எழுதப்பட்டதைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

   (a) 1948-2-04 (b) 1948-02-04 (c) 48-02-04


2. 12 விளிம்புகள், 8 உச்சிகள், 6 முகங்களைக் கொண்டதும் சமமான சதுர வடிவுடைய முகங்களைக் கொண்டதுமான திண்மத்தின் பெயர் யாது? ..........................................

3. பெறுமதி காண்க

| $l$ | $ml$ |
|---|---|
| 3 | 856 |
| + 4 | 84 |
| | |

4. கழித்து எழுதுக.

| | மணி | நிமிடம் |
|---|---|---|
| | 8 | 20 |
| - | 5 | 40 |
| | | |

5. 


   A என்னும் புள்ளி வட்டத்தின் மேல் அமைந்துள்ளது.

   i. ......... எனும் புள்ளி வட்டத்திற்கு வெளியே அமைந்துள்ளது.

   ii. ................. என்னும் புள்ளி வட்டத்தினுற் அமைந்துள்ளது.


6. பின்வரும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.

   பதினெட்டு பில்லியன் மூன்று ......................................

7. பியாவிடம் ரூ 850 காணப்பட்டது. அவர் ரூ 675 ஐ செலவு செய்தால் எஞ்சியுள்ள மீதிப்பணம் எவ்வளவு ?


   ........................

8. 77 என்பதை கிட்டிய 10 இற்கு மட்டந்தட்டுக. ..............................


9. 


சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

i. a ஓர் கூர்ங்கோணம் b ஓர் செங்கோணம் ஆகும்.
ii. a ஓர் விரிகோணம் b ஓர் கூர்ங்கோணம் ஆகும்.
iii. a ஓர் கூர்ங்கோணம் b ஓர் விரிகோணம் ஆகும்.

10. 


வெற்றுக் கூடுகளுக்குப் பொருத்தமான திசைகளை எழுதுக.

11. 



A................................ B.............................

தரப்பட்டுள்ள கூட்டங்கள் A , B ஆகியவற்றிற்கு பொருத்தமான பெயர்களை எழுதுக.

12. 13075 m என்பதை கிலோமீற்றர், மீற்றர்களில் எழுதுக. ..............................

13. இரட்டை முதன்மை எண் யாது? ..............................

14. நாணயம் ஒன்றின் தடிப்பை அளக்கப் பொருத்தமான அலகு பின்வருவனவற்றுள் யாது?
i mm ii cm iii m

15. 


தரப்பட்ட வலையை உபயோகித்து உருவாக்கக் கூடிய

i. திண்மம் யாது? ...........................................…….
ii. அதற்கு எத்தனை உச்சிகள் உண்டு ? ................................

16. நான்கு என்ற எண் இரண்டிலும் பெரிதாகும். இதனை சமனிலிக் குறியீட்டை உபயோகித்து எழுதுக. ........................

17. குறித்த எண் ஒன்றை கிட்டிய 10 இற்கு மட்டம் தட்டிய போது 90 பெறப்பட்டது.

i. அவ் எண் பெறக்கூடிய மிகப் பெரிய பெறுமதி யாது?
**ii.** அவ் எண் பெறக்கூடிய மிகச் சிறிய பெறுமதி யாது?

18. 


உருவில் குறிக்கப்பட்ட கோணங்களில் நேர் கோணத்தை விட பெரிதாகவும் மற்றும் நான்கு செங்கோணங்களை விட குறைவாகவும் உள்ள கோணம் யாது?

i a ii. b iii. c iv. d

19. $\frac{6}{18}$ இற்கு சமவலுப்பின்னம் இரண்டு எழுதுக.

…………………………………………..…………….


20. $29.5 + 9.87$ இன் பெறுமதியைக் காண்க. ..............................

## பகுதி **II**

- **முதலாம் வினாவிற்கும் மேலும் 04 வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **முதலாம் வினாவிற்கு 16 புள்ளிகளும் ஏனைய வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 11 புள்ளிகளும் வழங்கப்படும்.**
- **விடைகளை வேறொரு தாளில் எழுதுக.**

1. எண் கோலங்கள் தொடர்பாக நீர் கற்றவற்றில் ஒற்றை எண்கள் , இரட்டை எண்கள் , முதன்மை எண்கள் , சேர்த்தி எண்கள், சதுர எண்கள், முக்கோணி எண்கள் போன்றவற்றை நினைவு கூர்க.

a) புள்ளிகள் மூலம் நிமலன் வடிவமைத்த எண்கோலம் ஒன்றின் முதல் நான்கு நிலைகளும் கீழ்வருமாறு.



I. புள்ளிகளை உபயோகித்து ஐந்தாவது கோலத்தை வரைக.

II. முதல் ஐந்து கோலங்களிலும் உள்ள புள்ளிகளின் எண்ணிக்கையை ஒழுங்காக எழுதுக.

III. மேலே காட்டப்படுவது எவ்வகை எண்கோலம் ?

IV. இதன் 9வது உறுப்பு யாது ?

V. 144 என்பது எத்தனையாவது உறுப்பு ?

b) 1+2+3+4+5+6+7 = 28
முக்கோணி எண்கோலத்தின் 7வது உறுப்பு மேலுள்ளவாறு காட்டப்படலாம்.

I. 8வது முக்கோணி எண் யாது?

II. 55 என்பது எத்தனையாவது முக்கோணி எண்?


III. 10 இற்கும் 20 இற்கும் இடைப்பட்ட முதன்மை எண்களை எழுதுக.

2. சுருக்கி எழுதுக.

a) I. $4987 + 92$    III. $430 \times 10$    V. $854 \times 37$

II. $9000 - 376$    IV. $35000 \div 100$    VI. $839 \div 10$

3. எண்களை குறிப்பதற்காக உபயோகிக்கப்படும் நேர்கோட்டுத் துண்டம் எண்கோடு எனப்படும்.




I. சரியாக வரையப்பட்ட எண்கோடு ஒன்றின் பண்புகள் மூன்று எழுதுக.

II. எண்கோடு ஒன்று வரைந்து 0, -3, 3,-1 என்பவற்றைக் குறித்துக் காட்டுக.

III. 0, -3, 3,-1 என்னும் நிறை எண்களை ஏறுவரிசைகளில் எழுதுக.

IV. < , > என்பவற்றில் பொருத்தமானவற்றை வெற்றிடங்களில் எழுதுக.

a) -7…… 3    b) 0 ……….. -8    c) -5 ……… -9

4. I. பகுதிஎண் 10 ஆகவும் தொகுதி எண் 3 ஆகவும் உள்ள பின்னத்தை எழுதுக.

II. பகுதி எண் 5 ஆகவுள்ள அலகுப்பின்னத்தை எழுதுக.


III. நீர் (II) இல் எழுதிய அலகுப்பின்னத்திற்கு சமவலுப்பின்னம் ஒன்று எழுதுக.


IV. $\frac{5}{13} + \frac{2}{13} + \frac{4}{13}$ பெறுமதி காண்க.


V. $\frac{7}{8} - \frac{1}{4}$ பெறுமதி காண்க.


VI. இரு அலகுப் பின்னங்களின் கூட்டுத்தொகை $\frac{8}{15}$ ஆகும். அவ் இரு பின்னங்களும் யாவை?


5. பின்வரும் கூற்றுக்களில் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடைப்புக்குள் குறிக்க.

a)
I.  இது ஒரு நாற்பக்கல் ( )

II.  இது ஒரு மூடிய உருவம் ( )

III.  செவ்வகம் ஒன்றின் எல்லாக் கோணங்களும் சமன் ( )


IV.  இது ஓர் நேர்கோணமாகும். ( )

V.  தரப்பட்ட இணைகரத்தில் பக்கங்கள் எல்லாம் சமமாகும். ( )

b) I. சதுரம் ஒன்றின் சுற்றளவு 48 cm ஆகும். இதன் ஒரு பக்க நீளம் யாது ?

II. செவ்வகம் ஒன்றின் நீளம் , அகலம் ஆகியன முறையே 17 cm , 13 cm ஆகும். அதன் சுற்றளவு யாது?

III. 7 cm




18 cm

தரப்பட்ட உருவின் சுற்றளவு யாது?

6.

I. " நூற்றுப் பதினெட்டு தசம் பூச்சியம் மூன்று " என்பதை இலக்கங்களில் எழுதுக.




II. எண்சட்டத்தில் குறிக்கப்பட்ட எண்ணை இலக்கங்களில் எழுதுக.

III. அதனை சொற்களில் எழுதுக.

IV. $\frac{3}{10}$ , $\frac{7}{100}$ என்பதை தசமத்தில் எழுதுக.

V. $53.7 - 8.98$ பெறுமதி காண்க.

7. $28 = 1 \times 28$, $28 = 2 \times$ …….. , $28 = 4 \times$ ……….

I. மேலே உள்ள வெற்றிடங்களுக்கு பொருத்தமான எண்களை எழுதுக.

II. 28 இன் காரணிகள் எல்லாவற்றையும் எழுதுக.

III. 9 என்பது 28 இன் காரணியாகுமா ? உமது விடைக்கான காரணங்களை எழுதுக.

IV. 357 ☐ என்னும் நான்கு இலக்க எண்ணானது 5 இனால் மீதியின்றி வகுபடும். வெற்றுக்கூட்டில் பொருத்தமான இலக்கங்களை எழுதுக.

**V.** தேங்காய் ஒன்றின் விலை ரூ 70 ஆகும். இவ்வாறான 6 தேங்காய்களின் விலை யாது?